**செய்தி வெளியீடு எண்: 768** **நாள்: 25.10.2018**

**<u>செய்தி வெளியீடு</u>**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் சட்டமன்றப் பேரவை விதி 110—ன் கீழ் 14.06.2018 அன்று **“ஜவுளித்தொழிலின் வளர்ச்சியை தமிழ்நாட்டில் மேலும் ஊக்குவிக்கும் விதமாக, நடப்பாண்டில் தமிழ்நாடு அரசின் சார்பாக கோயம்புத்தூரிலுள்ள கொடிசியா அரங்கில் பன்னாட்டு ஜவுளிக் கண்காட்சி 2 கோடி ரூபாய் செலவில் நடத்தப்படும்”** என அறிவிக்கப்பட்டது. அதன்படி, 2019—ஆம் ஆண்டு ஜனவரி திங்கள் 27 முதல் 29 முடிய மூன்று நாட்கள் கோயம்புத்தூர், கொடிசியா அரங்கத்தில் பிரம்மாண்டமாக பன்னாட்டு ஜவுளிக் கண்காட்சி நடைபெற உள்ளது. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 27.01.2019 அன்று இக்கண்காட்சியினை துவக்கி வைக்கவுள்ளார்கள். இக்கண்காட்சிக்கென தமிழ்நாடு அரசு ரூ.2 கோடி நிதி ஒதுக்கீடு செய்துள்ளது.

2019—ம் ஆண்டு ஜனவரி திங்களில் நடைபெறவுள்ள பன்னாட்டு ஜவுளிக் கண்காட்சியின் முன்னோட்ட விழா 26.10.2018 அன்று கோயம்புத்தூர் ஹோட்டல் லீ—மெரிடியனில் சிறப்புற நடைபெறவுள்ளது.

இவ்விழாவிற்கு மாண்புமிகு நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி மற்றும் சிறப்பு திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் திரு.எஸ்.பி.வேலுமணி அவர்கள் தலைமையேற்று, விழாவினை துவக்கி வைத்து கண்காட்சி குறும்படத்தினை வெளியிடவுள்ளார்கள். மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் திரு.ஓ.எஸ்.மணியன் அவர்கள் விழாப்பேருரையாற்றி, கண்காட்சி கையேட்டினை வெளியிட்டு, இணையதளத்தினை துவக்கி வைக்கவுள்ளார்கள். மாண்புமிகு தமிழ்நாடு சட்டப்பேரவைத் துணைத் தலைவர் திரு பொள்ளாச்சி வி.ஜெயராமன் அவர்கள் கண்காட்சி சின்னத்தை வெளியிடவுள்ளார்கள்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை—9**